From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 106/2020

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Rathika | Father/Husband Name | : Gopinathan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 08.10.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் மதுரை புளியங்குளம் எல்.கே.டி. நகரில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். ஆஜர் எதிரி கோபிநாதன் என் கணவர். கடந்த 23.03.01ம் தேதி எனக்கும் 1-வது எதிரிக்கும் திருமணம் நடந்தபோது என் பெற்றோர் எனக்கு 37 பவுனும், என் கணவருக்கு 5 பவுனும் மொத்தம் 42 பவுன் நகையும், மற்ற பண்ட பாத்திரங்களும் சீதனமாக கொடுத்தனர். எங்களுக்கு 2 பெண் குழந்தகள் உள்ளனர். என் கணவர் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்று திரும்பி வரும்போதெல்லாம் அவனை வைத்திருக்கிறாய:. இவனை வைத்திருக்கிறாய் என்று சந்தேகப்படுவார். 2016ம் வருடம் என்னை அடித்து துன்புறுத்தி வீட்டை விட்டே துறத்திவிட்டார். பின்னர் வீட்டை பூட்டி வைத்துவிட்டு வெளிநாடு சென்றுவிட்டார். அந்த வீடு உள்ள இடம் சுமார் 5 சென்ட் விஸ்தீரணம் உள்ளது. அது என் அப்பா எனக்கு கொடுத்தது. அந்த இடத்தில் எனது நகைகளை பயன்படுத்தி எதிரி வீடு கட்டியுள்ளார். அதன்பிறகு நான் என் பெற்றோர் வீட்டில் வசித்து வந்தேன். கடந்த 2019ம் வருடம் என் கணவர் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த சமயம் மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் என் கணவர்மீது புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். நான் மேற்படி புகாரை நான் காவல் நிலையத்தில் கொடுத்த பிறகு என் கணவர் தனலெட்சுமி என்ற வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து அவர்களுக்கு குருஇந்திரவேல் என்ற பெயரில் கடந்த 07.09.2020ம் தேதி ஆண் குழந்தை பிறந்து அதற்கான பிறப்புச்சான்றிதழ் பதிவு செய்யப்பட்டள்ளது. அந்த சான்றிதழ் தற்போது என்னிடம் உள்ளதால்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அந்த சான்று அ.சா.ஆ. 2 ஆகும். (எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. ) கொண்டார். மேலும் என் கணவர் அவரது 2-வது மனைவி தனலெட்சுமி ஆகியோருக்கான குடும்ப அட்டையின் எனது கணவர் கோபிநாதனின் ஆதார் எண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளது அதற்கான புகைப்பட நகல் என்னிடம் உள்ளது. அந்த குடும்ப அட்டையின் பதிவு எண். 97A1743663 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 106/2020

Deposition of witness for: PW - 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Ammapponnu | Father/Husband Name | : | Perumal |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |
| Date | : | 08.10.2021 | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் தற்போது மதுரை புளியங்குளம் எல்.கே.டி. நகரில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1 என் மகள். ஆஜர் எதிரி கோபிநாதன் என் மருமுகன். கடந்த 2001ம் ஆண்டு என் மகளுக்கும் 1-வது எதிரிக்கும் திருமணம் நடந்தபோது நாங்கள் என் மகளுக்கு 37 பவுனும், என் மகளின் கணவருக்கு 5 பவுனும் மொத்தம் 42 பவுன் நகையும், மற்ற பண்ட பாத்திரங்களும் சீதனமாக கொடுத்தனர். அவர்களுக்கு 2 பெண் குழந்தகள் உள்ளனர். என் மருகன் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்று திரும்பி வரும்போதெல்லாம் அவனை வைத்திருக்கிறாய:. இவனை வைத்திருக்கிறாய் என்று என் மகளளை சந்தேகப்படுவார். என்னையும் வேடியா அவுசாரி என்று உன்னைமாதிரிதான் உன் பிள்ளையும் இருக்கும் என்று அசிங்கமாக பேசினார். அதன்பிறகு எதிரி அமுதா என்ற ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்துக்கொண்டு என் மகளை அடிக்கடி அடித்து கொடுமைப்படுத்தி வந்தார். பின்னர் என் மகளை அடித்து துன்புறுத்தி வீட்டை விட்டே துறத்திவிட்டார். பின்னர் அவருடைய அக்கா மகனுடன் என் மகள் சென்றுவிட்டதாக சொல்லி அசிங்கப்படுத்தினார். பின்னர் பேரப்பிள்ளைகளுக்கு 5 பவுன் நகையும், என் சம்மந்தி இறந்த சமயம் 1 பவுன் நகையும், என் மகளுக்கு நாளரை சென்ட் இடமும் வாங்கி கொடுத்து அதில் எதிரி வீடு கட்டிக்கொண்டார். என் மகளுக்கு நாங்கள் கொடுத்த சீதனப்பொருட்கள் மற்றும் நகைகள் ஆகியவற்றை எதிரியிடம்தான் உள்ளது. போலீசார் என்னை விசாரித்தனர். சிலைமான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது எங்களை விசாரிக்கவில்லை, அதன்பின்னர் மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அதன்பேரில் போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.

From-39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 106/2020

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Muniyammal | Father/Husband Name | : Pandi |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 08.10.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் சிலைமானில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும், அவர் என் சின்னம்மா மகள். ஆஜர் எதிரி என் தங்கையின் அ.சா.1-ன் கணவர். சுமார் 20 வருடங்களுக்கு முன்பாக திருமணம் நடந்ததாக சொன்னார்கள். எனக்கு வருடம் ஞாபகமில்லை. திருமணத்தின்போது அ.சா.1-ன் பெற்றோர் 42 பவுன் நகையும், மற்ற பண்ட பாத்திரங்களும் சீதனமாக வீட்டை விற்றுவிட்டு வாங்கி கொடுத்தனர். அவர்களுக்கு 2 பெண் குழந்தகள் உள்ளனர். எதிரி மலேசியா சென்றிருந்தார். அவர் தன் மனைவியை சந்தேகப்படுவார், அதனால் அ.சா.1 கோபித்துக்கொண்டு அவரது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

சந்தர்ப்பம் அளித்தும் செய்யவில்லை.